விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 24 புதன்கிழமை (10.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326




# வடக்கு உட்பட நாடு முழுவதும் கொட்டுகின்றது கன மழை

- பல கிராமங்கள் நீரில் மூழ்கின
- வடக்கின் 5 மாவட்டங்கள் உட்பட 16 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

*(யாழ்ப்பாணம்)* வடக்கு உட்பட நாடு முழுவதும் கொட்டுகின்ற கன மழை காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. வீதிகள் எங்கும் வெள்ளக்காடாக காணப்படுகின்றது. வடக்கின் 5 மாவட்டங்கள் உட்பட 16 மாவட்டங்களுக்கு தொடர்ந்து சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

யாழ்., கிளிநொச்சி, மன்னார்

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்படுவதாக மாகாண கல்வி அமைச்சின் செயலா 15

## யாழில் தொடர் கன மழையால் 25 ஆயிரத்து 508 பேர் பாதிப்பு

75 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் பெய்த கடும் மழை காரணமாக 7,584 குடும் 15



திருநெல்வேலியில்

## அதிகூடியளவான மழைவீழ்ச்சி பதிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அதிகூடியளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 15

## நாடு முழுவதும் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தோர் 15ஆக உயர்வு

23,638 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் சீரற்ற காலநிலை காரணமாக மரணித்தவர்களின் எண்ணிக்கை 15ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், ஐவர் காயமடைந்துள்ளதுடன் 15



கொரோனா

## 17 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 17 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித் 15

## பரந்தன் ஏ9 வீதியில் மோ.சைக்கிள் விபத்து

இருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் ஏ9 வீதி 15

வவுனியாவில்

## 42 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 42 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 15

வட மாகாணம் உட்பட

## நாடு முழுவதும் தொடர் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணம் உட்பட நாடு முழுவதும் தொடர் மழைக்கு வாய்ப்புள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதேவேளை மறு அறிவித்தல்வரை தென்மேற்கு வங்காள விரிகுடா மற்றும் இலங்கையைச் சுற்றி 15

# வெள்ள அனர்த்தப் பாதிப்பை யாழ். மேயர் நேரில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வலம்புரி பத்திரிகை நிறுவனம் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களை யாழ். மாநகர சபை முதல்வர் மணிவண்ணன், மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் நேற்று நேரில்சென்று ஆராய்ந்தனர்.

யாழில் நேற்று முன்தினம் இரவுமுதல் தொடர்ச்சியாக பெய்த கன மழையால் பல இடங்கள் வெள்ளக் காடாகின.

யாழ். மாநகர சபையால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பிறவுண் வீதி மற்றும் பிறவுண் வீதியின் 2 ஆம் ஒழுங்கைப் பகுதிகளில் உள்ள வீடுகளிலும் அதிகளவான வெள்ளம் தேங்கி நின்றன.

மேலும் வலம்புரி பத்திரிகை நிறுவனத்திலும் அதிகளவான தண்ணீர் உட்புகுந்தன.

இதனை மாநகர முதல்வர் மற்றும் வ. பார்த்தீபன் ஆகியோர் நேரில் ஆராய்ந்தனர். (ம-3)

# போராட்டங்கள் நடத்துவதன் மூலம் அரசை பலவீனப்படுத்த முடியாது

## மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே

(கொழும்பு)

போராட்டங்கள் ஊடாக மீண்டும் கோவிட் வைரஸ் பரவலை தீவிரப்படுத்த ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர். போராட்டங்களின் பின்னணியில் அரச சார்பற்ற அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் உள்ளன. போராட்டங்களின் ஊடாக அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது என மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட் -19 வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் பிரதான இலக்காக காணப்பட்டது. தெற்காசிய வலய நாடுகளில் கோவிட் தடுப்பூசி செலுத்தியுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.

கோவிட் தாக்கத்திற்கு மத்தியில் அரச நிர்வாகத்தையும், அபிவிருத்தி பணிகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஒரு தரப்பினரது பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக புதுவருட கோவிட் கொத்தணி பரவல் தீவிரமடைந்தது. அதன் தாக்கத்தை முழு நாடு எதிர் கொள்ள நேரிட்டது. நீண்ட முடக்கத்திற்கு பிறகு நாடு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. போராட்டங்கள் ஊடாக மீண்டும் கோவிட் -19 வைரஸ் பரவலை தீவிரப்படுத்த ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

போராட்டங்களின் பின்னணியில் அரச சார்பற்ற அமைப்புக்களும் மக்கள் விடுதலை முன்னணியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். போராட்டங்களினால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது என்றார். (ம-3)

# மண்டைதீவில் வளர்ப்பு மாடுகளால் நெற்பயிர்கள் நாசம்

(மண்டைதீவு)

மண்டைதீவில் வளர்ப்பு மாடுகள் நெற்பயிர்களை நாசம் செய்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல் விதைப்புக் காலத்தில் மாடுகளை கட்டி வளர்க்க வேண்டும் என்ற கட்டுப் பாடுகள் இருக்கின்றபோதிலும் அது விடயத்தில் மாடு வளர்ப்பவர்கள் அசமந்தம் செய்வதால், அருமந்த நெற்பயிர்களை மாடுகள் நாசம் செய்து வருவதாகவும் இது விடயத்தில் விவசாய அமைப்புகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3)

## வல்லையில் வெள்ள நீரால்

# வீதிக்கு வந்த முதலை

## வாகனத்தில் மோதி உயிரிழப்பு



(கரணவாய்)

யாழில் நேற்று தொடக்கம் தொடர்ந்து பெய்த கன மழை காரணமாக வீதிக்கு வந்த முதலை ஒன்று வாகனம் மோதியதில் உயிரிழந்துள்ளது.

வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு அருகில் 750 பிரதான வீதியில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ம-3,60)

# பொக்கணை கிணற்றிலிருந்து நீர் வெளியேறுகிறது

## 25 குடும்பங்கள் இடம்பெயர்வு

(குப்பிழான்)

தொடர்ச்சியான கடும் மழை காரணமாக ஊரெழு பொக்கணைக் கிணற்றுக்குள் கடல் நீர் உட்புகுந்து நீர்மட்டம் உயர்ந்தமையால் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் நீரை வெளியில் தள்ள ஆரம்பித்துள்ளது.

அதுமாத்திரமன்றி பொக்கணைக்கு அண்மையாகவுள்ள குழாய்க் கிணறுகள், கிணறுகளும் நிலமட்டத்துக்கு மேலாக நீர் எழுந்து பாய்கின்றன.

இதன் காரணமாக நேற்றுக் காலை முதல் ஊரெழு மேற்கு பொக்கணைக் கிணற்றை அண்டியுள்ள ஜே 267 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பல வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்தது. இதனால் 25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து அருகிலுள்ள சனசமூக நிலையத்திலும் ஊரெழு கணேச வித்தியாசாலையிலும் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். (ம-3,18)


இரண்டாம் ஆண்டு

நினைவு நாள்

அமரர் கந்தவனம் தேவசிகாமணி



திதி : 10.11.2021

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

அன்னாரின் இரண்டாவது நினைவுத் திதியான இன்று (10.11.2021) புதன்கிழமை வீட்டுப் பூஜை நடைபெறும். கந்தசஷ்டி விரதம் காரணமாக 12.11.2021 வெள்ளிக் கிழமை வீட்டில் மதியபோசன நிகழ்வு நடைபெறவுள்ளது. இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக சகலரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
077 913 8996

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(C-2985)



**வடக்கு மாகாணத்தின் இந்து பௌத்த கலாசார பேரவையினால் இதுவரை நடாத்தப்பட்டு வந்த 2 ஆம் மொழிகளான சிங்களம் மற்றும் ஆங்கில கற்கைநெறி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது**

இந்து பௌத்த கலாசார பேரவையினால் இதுவரை காலமும் வடக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்டு வரும் 2 ஆம் மொழிக் கற்கைநெறிகளான சிங்களம் மற்றும் ஆங்கில மொழி வகுப்புக்கள் வழமை போன்று அரச பாடசாலைகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன. நவம்பர் மாதம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு பின்னர் ஏற்கனவே நடைபெற்ற வகுப்புக்களும், புதிதாக இணையவுள்ளவர்களுக்கான புதிய வகுப்புக்களும் 5 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தினை தலைமைக் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ளலாம். இக் கற்கைநெறி பற்றி மாணவர்கள் பொதுவான விபரங்களை அறிவதற்கு அந்தந்த மாவட்டங்களிலுள்ள இணைப்பாளர்கள் ஊடாக தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**கற்பித்தல் முற்றிலும் இலவசம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் (தலைமைக் காரியாலயம்) | - 077 271 1181 / 076 028 2693 |
| வன்னி | - 077 935 8923 |
| முல்லைத்தீவு மாவட்டம் | - 074 151 9139 / 076 164 6608 |
| கிளிநொச்சி மாவட்டம் | - 076 563 2016 |
| மன்னார் மாவட்டம் | - 076 028 2693 |

(8552)

தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன்
பொதுச்செயலாளர்,
இந்து பௌத்த கலாசார பேரவை,
வடக்கு மாகாணம்.

# இலங்கை இராணுவத்திற்கு வழங்கும் பயிற்சியை ஸ்கொட்லாந்து உடன் நிறுத்த வேண்டும்

## மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் முன்னாள் விசேட அறிக்கையாளர் வலியுறுத்து

(ஸ்கொட்லாந்து)

**தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் முன்னாள் விசேட அறிக்கையாளரும் மனித உரிமைகள் தொடர்பான பூகோள கற்கையகத்தின் செயலாளர் நாயகமுமான பேராசிரியர் மன்ப்ரெட் நோவார்க் வலியுறுத்தினார்.**



அத்தோடு அகதிகள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டால் இலங்கை இராணுவத்தினருக்கு பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியிலும் வழங்கி வருகின்ற பயிற்சியை ஸ்கொட்லாந்து பொலிஸார் நிறுத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

"கை.கால்களில் அல்லது விரல்களில் மாத்திரம் கட்டி நபர்களைத் தொங்கவிடுதல், பெற்றோல் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துதல் போன்ற சித்திரவதைகள் குறிப்பாகப் பயன்படுத்தப்படுவதாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்" என்று தெரிவித்துள்ளஅவர்.

"இத்தகைய சித்திரவதைகள் இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்படுவதற்கான ஆதாரங்கள் காணப்படுமாயின் எதிர்வரும் காலத்தில் அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதிலிருந்து ஸ்கொட்லாந்து பொலிஸார் விலகிக் கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

"இதுபற்றிய விசாரணைகளுக்கு இலங்கை உரியவாறு ஒத்துழைப்பை வழங்காவிட்டால், கடந்த காலங்களில் வலியுறுத்தப்பட்டதைப் போன்று இவ்விவகாரம் சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்" என்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் முன்னாள் விசேட அறிக்கையாளர் மன்ப்ரெட் நோவார்க் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை
## விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் நவம்பர் 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை அடுத்த ஆண்டு பெப்ரவரி 7 முதல் மார்ச் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நாட்டின் பல பகுதிகளில் மின் விநியோகம் தடை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்பட்டது.

நேற்றுக் காலை முதல் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் மின்சாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

மேலும் சேவையை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டார். (நி-5)

## அடுத்த வருடம் முதல் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர்

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் சட்டத்தை அடுத்த வருடம் முதல் மீண்டும் செயற்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த உத்தரவு 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அந்தத் திட்டம் செயற்படுத்தப்படாததால் மாகாண மட்டத்தில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் ஜூன் 15ஆம் திகதி வரை அனைத்து முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர்களையும் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு இல்லாத முச்சக்கர வண்டிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார். (நி-5)

அகவை நாள் வாழ்த்துக்கள்





மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
கடல்தொழில் அமைச்சராய் கலங்கரை தீபத்தின் ஒளியாய்
தமிழ் மக்களின் தனித் தலைவனாய் வடமாகாண உறவுகளின் தோழனாய்
அத்தியடி விநாயகரின் பக்தனாய் கார்த்திகை மாதத்தில் மலர்ந்த இதழாய்
மலர்ந்து தேச மெங்கும் வானவில் போல் பிரகாசமான சுடர் ஒளியாய்
யாழ். பல்கலையின் ஜனநாயக ஊழியர் சங்கத்தின்
அங்கத்தவரின் ஒளிவிளக்காய்
அனைத்து துறைகளின் சமூக சேவகனாய்
"அறத்தின் நேர் வழி நின்று அறநெறி காட்டி"
மக்கள் பணியே மகேசன் பணியென அயராது உழைத்து வரும்
கலங்கரை விளக்கு மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின்
ஜனனதின நாளில் பல்லாண்டு காலம் சீர் சிறப்புடன்
நீடூழி காலம் வாழ வாழ்க வாழ்கவென
வாழ்த்துகின்றோம் வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர்:
யாழ்ப்பாண பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்

(8553)

## பரிஸ் மாஸ்டர்ஸ்

# ஆறாவது முறையாக ஜோகோவிச் சம்பியன்



பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில், உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இந்த சம்பியன் பட்டம் மூலம் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இந்த தொடரில் ஆறாவது சம்பியன் பட்டத்தை வென்றார்.

எதிர்பார்ப்பு மிக்க இறுதிப் போட்டியில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ்வை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் டேனில் மெட்வேடவ் கைப்பற்றினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற செட்டுகளில் மீண்டெழுந்த ஜோகோவிச், 6-3, 6-3 என்ற செட்களில் வெற்றிக்கொண்டு சம்பியன் பட்டத்தை வென்றார்.

முன்னதாக ஜோகோவிச், 2009, 2013, 2014, 2015, 2019ஆம் ஆண்டுகளில் இந்த தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

## ஆறுதல் வெற்றியுடன்

# வெளியேறியது இந்தியா



இருபது-20 உலகக்கிண்ணத் தொடரின் 42ஆவது லீக் போட்டியில் இந்தியக் கிரிக்கெட் அணி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆறுதல் வெற்றியுடன் இந்தியக் கிரிக்கெட் அணி, நடப்பு தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் குழு 2இல் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணியும் நமீபியா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியக் கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 132 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, வெய்ஸ் 26 ஓட்டங்களையும் பார்ட் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.


இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பும்ரா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 133 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 15.2 ஓவர்கள் நிறைவில், 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இந்தியக் கிரிக்கெட் அணி 9 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரோஹித் சர்மா 56 ஓட்டங்களையும் கே.எல். ராகுல் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நமீபியா அணியின் பந்து வீச்சில், ஜென் பிரைன்லின்ங் 1 விக்கெட்டினை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 3 விக்கெட்டுகளை வீழ்த்திய ரவீந்திர ஜடேஜா தெரிவு செய்யப்பட்டார். (4-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2446

### சபேஷன்




### உதயா




### லங்கேஸ்




### வினோயா




### மயூரன்




### கனிஸ்ரலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

10.11.2021
ஐப்பசி 24, புதன்கிழமை
சஷ்டி பிற்பகல் 2.29 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 9.47 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம், திருவாதிரை
கந்த சஷ்டி விரத நிறைவு
திருவண்ணாமலை கொடி

வளவன்


மேஷம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும் நாள், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறைத்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், பக்குவமாய் நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், போசனசுக முண்டு.


சிம்மம்

சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு.


மகரம்

தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கலாம்.


கும்பம்

தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனச்சுகக் குறைவுகள் இடம்பெறலாம்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

உன்னையே நீ நம்பாதவரை யாரையும் நீ நம்பப் போவதில்லை

# மருத்துவமனையில் தீ விபத்து நான்கு குழந்தைகள் பலி



(டில்லி)

இந்தியாவின் மத்தியப் பிர தேச மாநிலம் போபாலில் உள்ள மருத்துவமனை ஒன் றின் பிரசவ விடுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் பிறந்து சில நாட் களேயான நான்கு குழந்தைகள் உயிரிழந்தன.

போபாலில் உள்ள கமலா நேரு குழந்தைகள் மருத்துவமனையில் நேற்று முன் தினம் திங்கட் கிழமை இரவு 9 மணியளவில் தீவிபத்து ஏற்ப ட்டது. இதனையடுத்து விரை ந்த தீயணைப்பு வீரர்கள் 36 குழந்தைகளை பாதுகாப்பாக மீட்டு வெளியேற்றினர்.

தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் மூன்று மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

எனினும் துரதிஷ்டவசமாக தீயில் சிக்கி நான்கு குழந் தைகள் உயிரிழந்தன.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப் படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள ஒரு மருத்துவமனையின் கொவிட் தீவிர சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 11 நோயாளிகள் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# குளிரூட்டும் வசதி தேவைப்படாத கொரோனாத் தடுப்பூசி கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

குளிர்சாதனப் பெட்டியில் வைக்க தேவையில்லாத புதிய கொரோனாத் தடுப்பூசியை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையைச் சேர்ந்த ஆராய்ச்சி குழுவினர் உருவாக்கி உள்ளனர்.

வைரஸின் முனைப்பகுதியில் உள்ள புரோட்டினை கொண்டு தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவை உருவாக்கும் சார்ஸ் வைரஸ் மற்றும் அதன் உருமாறிய ரகங்களுக்கு எதிராக சிறப்பான நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது.

அறை வெப்பநிலையிலேயே 7 நாட்கள்வரை வைத்திருந்து இதை பயன்படுத்தலாம். அதுவரை சீராகவும், செயற்றிறன் மிக்கதாகவும் தடுப்பூசி இருக்கும்.

மற்ற நோய்களுக்கான தடுப்பூசி உற்பத்திக்கும் இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம்.

இந்த தொழில் நுட்பத்துக்கு காப்புரிமை கோரி விஞ்ஞானிகள் விண்ணப்பித்துள்ளனர்.

மேலும், தடுப்பூசியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த மருந்து நிறுவனங்களை அணுக உள்ளனர். (நி-5)

# கொவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்து நியூசிலாந்தில் ஆர்ப்பாட்டம்




(வெலிங்டன்)

அரசின் கட்டாயத் தடுப்பூசி ஆணை மற்றும் கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூசிலாந்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்தை நோக்கி சென்ற நிலையில் பாராளுமன்ற சூழலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

பாராளுமன்ற கட்டடத்தின் இரண்டு நுழைவாயில்களைத் தவிர மற்ற அனைத்தும் மூடப்பட்டு எதிர்ப்பாளர்கள் நுழைய முடியா தவாறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் தடுப்பூசி கட்டாய ஆணைக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டது.

அத்துடன், நாங்கள் ஆய்வக எலிகள் அல்ல என போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

எனது சுய விருப்பின்றி தடுப்பூசி போடுமாறு என்னை யாரும் கட்டாயப் படுத்த முடியாது என பாராளுமன்றத்திற்கு வெளியே கூடியிருந்த எதிர்ப்பாளர்கள் உரக்கக் கத்தினர்.

சுகாதார துறையினர், ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு தடுப்பூசி கட்டாயம் என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் கடந்த மாதம் கூறினார். இது தனி மனித சுதந்திரத்தை மீறும் செயல் என விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில் நேற்றைய போராட்டம் குறித்து பாராளுமன்றத்திற்குள் செய்தியாளர்களிடம் பேசிய ஆர்டெர்ன் "போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் நியூசிலாந்து மக்களில் பெரும்பகுதியினரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கவில்லை" எனத் தெரிவித்தார். (நி-5)

## வீடுகளுக்குள் வெள்ளம்

# கல்லுண்டாய்க் குடியேற்றத் திட்டத்தில் ஏழு குடும்பங்கள் இடம்பெயர்வு

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை காரணமாகப் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வயல் நிலங்களும் அழிவடைந்துள்ளன.

கல்லுண்டாய்க் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் ஏழு குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கல்லுண்டாய்க் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் ஏனைய குடும்பங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், குறித்த பகுதி மக்கள் தங்களுக்குத் தேவையான உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர். (4-5-18)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்தது வாகனம்

## பத்து பேர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டில் கனமழை பொழிந்து வரும் நிலையில் கொழும்புத்துறையில் இருந்து பளை நோக்கி பயணித்த டொல்பின் ரக வாகனம் மழையினால் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்தது.

வாகனத்தில் பயணம் செய்த 10இற்கும் மேற்பட்டோர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-30-33)

# வர்த்தக நிலையம் உடைத்து 4 பவுண் நகை, பணம் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டச் வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதன்போது வர்த்தக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த 4பவுண் நகை மற்றும் முப்பதாயிரம் ரூபாய் பணம் ஆகியன திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# பரு.கடற்கரையில் கரையொதுங்கிய இனம் தெரியாத தாவர இனம்

(கரணவாய்)

பருத்தித்துறை கடற்பரப்பில் இனந்தெரியாத தாவர இனம் ஒன்று பெருமளவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை கரையொதுங்கி காணப்பட்டன.

தற்போது வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் இந்திய கரையோரப் பகுதிகளிலிருந்து இத் தாவரங்கள் அடித்து வரப்பட்டு இங்கு கரை ஒதுங்கி இருக்கலாம் என மீனவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை துறைமுகம் தொடக்கம் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு இத் தாவரங்கள் கரையொதுங்கிக் காணப்படுகின்றன. பல இலட்சக் கணக்கில் காணப்படும் தாவரங்களினால் மீனவர்கள் தமது வலைகளை கடலுக்கு கொண்டு செல்வதற்கு தடையாக இருப்பதாக தெரிவித்தனர். (4-5-60)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு வரணி மாசேரி நாலடி பிள்ளையார் திருக்கோவிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கு.கஜானந்த சர்மா , பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மா ஆகியோரின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் 29 ஆவது நினைவு தினம் நேற்றுக் காலை வவுனியா வைரப்புளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் ச.கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

(படம் : சதீஸ்)

# கொந்தளிக்கிறது கீரிமலைக்கடல்



(குப்பிழான்)

சீரற்ற காலநிலையால் யாழ்.கீரிமலைக் கடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை முதல் கடும் கொந்தளிப்புடன் காணப்படுகிறது. இதனால்,கடல் அலைகள் பல மீற்றர் வரை மேலெழுந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் கடலில் நீராடுவதற்கு பொதுமக்கள் எவரையும் காங்கேசன்துறைப் பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இதேவேளை, தற்போதைய காலநிலை காரணமாக கீரிமலைக் கடலில் எவரையும் இறங்க வேண்டாம் எனப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (4-5-18)

# முகக்கவசமின்றி நடமாடிய இருவருக்கு அபராதம்

(கரணவாய்)

கொவிட் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 22 ஆயிரத்து 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொரொனாத் தொற்றுக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு நேரம் முகக்கவசம் இன்றி நடமாடிய இருவருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பருத்தித்துறை பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு பருத்தித்துறை நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் 22 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படடது. (4-5-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 160 |
| தக்காளி | 450 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 160 | 200 | 200 |
| கரட் | 250 | 280 | 300 |
| பூசணி | 65 | 50 | 60 |
| புடோல் | 240 | 200 | 160 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 190 | 170 | 170 |
| பாகற்காய் | 450 | 500 | 700 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 600 | 400 | 500 |
| லீக்ஸ் | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 380 | 320 | 350 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 280 |
| போஞ்சி | 400 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 90 | -- | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50 - 80 |
| இராசவள்ளி | 260 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 350 | -- | - |
| முள்ளங்கி | 150 | -- | 150 |
| பொன்னாங்காணி | 45 | 60 | 40 |
| வல்லாரை | 90 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 130 |

# கொட்டித் தீர்த்த கனமழையால் வெள்ளக்காடாகியது வடக்கு







யாழ். நகர்





நல்லூர்




மன்னார்



கிளிநொச்சி

(படங்கள்: சிவசாந்தன், ஜோசப் நயன், கிருஸ்ணகுமார்)

## வெள்ளத்தில் சிக்கிய 71 பேர் கற்பிட்டி கடற்படையால் மீட்பு





(புத்தளம்)

கற்பிட்டி - பாலாவி பகுதியில் பலத்த மழையுடனான வானிலையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிய 71 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து, உரிய நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ஜி-5)

## அரசாங்கத்தில் இருந்து கொண்டு எதிர்க்கட்சி வேலையைச் செய்யமுடியாது


### பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்காமல் வெளியேறிய பின்னர் விமர்சியுங்கள் என அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து கொண்டு எதிர்க்கட்சிக்கான வேலையைச் செய்ய முடியாது. அரசாங்கத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் எங்களுடன் இணைந்து அந்த




வேலையைச் செய்யுங்கள்.

அப்படிச்செய்யவில்லை என்றால் நீங்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிக்காகவும், சலுகைகளுக்காகவும் அரசாங்கத்தை விமர்சிப்பதாகவே நாங்கள் நினைப்போம்" எனக் குறிப்பிட்டார். (ஜி-5)

# கேகாலையில் மண்மேடு சரிந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி



(கேகாலை)

கேகாலை மாவட்டம் - ரம் புக்கனை, தொம் பேமட பிரதேசத்தில் மணல் மேடு சரிந்ததில் அதில் சிக்கி 36 வயது தாய் மற்றும் அவருடைய 8 மற்றும் 14 வயது இரு பெண் பிள்ளைகள் உட்பட மூவர் உயிரிழந்ததாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

நேற்று அதிகாலை 5.30 மணியள வில் மணல் மேடு சரிந்து வீட்டின் மீது விழுந்ததில் வீடு முற்றாக மூடப்பட்டது.

இதில் வீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்பட்டபோதும், குடும்பத் தலைவர் மட்டும் தேடுதலின் போது காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-5)

## மற்றுமொரு மண்மேடு சரிந்ததில் தாதிய உத்தியோகத்தர் பலி

(குருநாகல்)

குருநாகல் - நாரம்மல வென்னறுவ பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் தாதியாகக் கடமையாற்றும் 23 வயதான யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (நி-5)

# நான்காவது அலையை அண்மித்துள்ளது இலங்கை

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை தற்போது நான்காவது அலையை அண்மித்துக் கொண்டிருக்கிறது. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் கொவிட் வைரஸ் பரவல் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

எனவே மக்கள் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றினால் அபாய நிலைமையிலிருந்து ஓரளவிற்கு பாதுகாப்பு பெற முடியும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மக்கள் சுகாதார விதி முறைகளைப் பின்பற்றுவதில் காணப்படும் பலவீனம், போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனங்களில் காணப்படும் பலவீனம், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றாமை உள்ளிட்ட காரணிகளால் தற்போது தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதேநிலைமை தொடர்ந்து தீவிரமடைந்து மீண்டும் நாட்டை முடக்க வேண்டி ஏற்படும் மக்களே முடிவினை தீர்மானிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2022 ஆம் ஆண்டிற்கான 1வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2022.01.01ஆம் திகதி தொடக்கம் 2022.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 10.11.2021 - 22.11.2021 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 23.11.2021 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 23.11.2021 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,479,775.00 | |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 188,265.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 70,455.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 28,015,103.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,545.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 706,398.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 219,450.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 73,632.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 57,750.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 179,025.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2021.10.07 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

க.தர்சுஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-2986)


# நீர்மட்ட அதிகரிப்பால் வான்கதவுகள் திறப்பு



(ஹற்றன்)

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

அந்தவகையில் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதன் காரணமாக இரண்டு வான் கதவுகள் நேற்று முன்தினம் இரவு முதல் திறக்கப்பட்டுள்ளன. (நி-5)

# மாலைதீவு ஜனாதிபதி கோட்டாபய சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் ஷாலிஹ் நேற்று செவ்வாய்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினார். (நி-5)

# கொட்டித்தீர்த்த கடும் மழையால் இரணைதீவு மக்கள் பாதிப்பு

(அக்கராயன்)

பூநகரி இரணைதீவு மக்கள் கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமது பூர்வீகத் தீவில் மக்கள் சுயமாக குடியமர்ந்தனர். தற்போது 84 குடும்பங்கள் இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் சுயமாக குடியமர்ந்த போது அரசியல் கட்சிகளினாலும் உதவி அமைப்புகளாலும் தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கு கிடுகுகள், மரங்கள் வழங்கப்பட்டன. தற்போது பெய்து கொண்டிருக்கும் மழையால் இக்குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளன.

நிரந்தர வீடுகள் இல்லை. தற்காலிக வீட்டில் இருந்து மழைக்குப் பாதுகாப்பாக சென்று தங்க பாடசாலை, பொது மண்டபம், ஆலயம் என்பன முழுமையாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறன. ஏற்கனவே வைத்திய வசதி, குடிநீர் வசதி என்பன இல்லாத நிலையில் இரணைதீவு மக்களை காலநிலையும் பாதிப்புகளை உருவாக்கி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரணைதீவு பாடசாலையினை புனரமைத்திருந்தால் மக்கள் இப்பாடசாலையில் தங்கலாம். பாடசாலையும் புனரமைக்கப்படவில்லை. பொது மண்டபமும் புனரமைக்கப்படவில்லை. இந்நிலையில் இரணைதீவு மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர். (4-5-350)

# சிகிச்சை பலனின்றி காட்டுயானை உயிரிழப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் - நெடுங்கேணி - ஊஞ்சால்கட்டி காட்டுப்பகுதியில் கடந்த வாரம் காயங்களுடன் யானை ஒன்று அடையாளங் காணப்பட்டது. அதனை அவதானித்த பொது மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் அந்த யானை காட்டுக்கு செல்லாமல் மீண்டும் காட்டின் அருகே நான்கு நாட்களாக காணப்பட்டது. இந் நிலையில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் , வடக்கு மாகாணத்தின் கால் நடை வைத்தியர் கிரிதரன் குழுவினரால் சிகிச்சையளிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தது. (4-5-299)

# ஊற்றுப்புலம் வள்ளுவர் பண்ணைக்கான போக்குவரத்து சீர்செய்யப்பட்டது



(முறிகண்டி)

கிளிநொச்சி ஊற்றுபுலம் வள்ளுவர் பண்ணைக்கான போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஊற்று புலம் பகுதியில் வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தற்பொழுது ஏற்பட்ட கால நிலை மாற்றம் காரணமாக புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்தது. ஊற்றுப் புலம் கிராமத்தில் தனித்தீவாக 90 குடும்பங்கள் சிக்கும் அபாய நிலை தொடர்பில் அவசர நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் குறித்த இடத்தை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன், போக்குவரத்திற்கு ஏற்ப துரிதமாக சீர் செய்யுமாறு ஒப்பந்தகாரரை பணித்தனர்.

இந்த நிலையில் இரவிரவாக குறித்த பாலத்தின் ஊடாக போக்குவரத்தினை மேற்கொள்வதற்கான தற்காலிக பணிகள் இடம்பெற்றது.

மக்கள் தற்பொழுது தமது அவசர தேவைகளிற்காக குறித்த வீதியை பயன்படுத்த முடியும் எனவும் மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (4-5-100-315)

# உடைப்பெடுத்தது நந்திக்கடல்



(அக்கராயன்)

முல்லைத்தீவின் நந்திக் கடலின் நீர் பெருங்கடலுடன் கலக்கத் தொடங்கி உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறொட்ரிக் ஜோன்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. நள்ளிரவு முதல் இது இயற்கையாக நிகழ்ந்துள்ளது. நந்திக் கடலின் நீர் மட்டம் உயர்கின்ற போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் வட்டுவாகல் பகுதியில் மண் அகற்றப்பட்டு நந்திக் கடல் நீர் பெருங்கடலுடன் கலக்க விடுவது வழமை.

ஆனால் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்த மழை காரணமாக நந்திக் கடல் நள்ளிரவு முதல் உடைப் பெடுத்து பெருங் கடலுடன் நீர் கலந்து வருவதாக அவர் தெரிவித்தார். (4-5-350)




# சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்ற எடுக்கும் முயற்சிக்கெதிராகவும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் எதிர் வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நெடுங்கேணி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் தணிகாசலம் தெரிவித்தார்.


குறித்த போராட்டத்தின் ஏற்பாட்டு குழு சார்பாக நேற்று அவரால் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வவுனியா மூன்று இனமக்களும் நீண்ட காலமாக வாழுகின்ற மாவட்டம்.

எமது மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதனூடாக இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடு அரசாங்கங்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

சிங்கள மக்களை குடியேற்றுவதற்காக யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் பூர்வீக மக்களது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன.

எனவே இனப்பரம்பலை மாற்றும் அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்தும் உரம் மற்றும் களை நாசினிகள் இன்மை, ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படாமை அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு , விலைவாசி உயர்வு போன்றவற்றை கண்டித்தும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-299)



கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக பழைய முறிகண்டிக்குளம், வன்னேரிக்குளம், கனகாம்பிகைக்குளம் ஆகிய குளங்களின் நீர் மட்டம் நிரம்பி வான் பாய ஆரம்பித்துள்ளது.(படங்கள்- கிருஸ்ணகுமார், சப்தசங்கரி, [illegible]ந்தன்)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022

## ஒன்பதில் வந்தது குரு பகவான்; பொன் பொருள் சேரும் இனிநாளும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**திட்டங்களைத் திடீர் திடீரென்று மாற்றிக் கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், இப்பொழுது 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கு வருகின்றார்.

சப்தம ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். மேலும் அதன் பஞ்சம பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். இதுவரை இருந்த தடைகள் அனைத்தும் தானாக விலகும்.

உங்கள் இலட்சியக் கனவுகள் அனைத்தும் ஒவ்வொன்றாக நிறைவேறப் போகின்றது. பணவரவு அதிகரிக்கும். இனிய விதத்தில் எதிர்பார்த்த பலன்கள் நடைபெறும்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 1, 3, 5 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே இந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. ஜென்மத்தைக் குரு பார்ப்பதால் நன்மைகள் அதிகம் கிடைக்கும்.

பார்த்த இடம் செழிக்கும். பட்ட இடம் துளிர்க்கும். பரபரப்பாகச் செயற்பட்டு பாராட்டும், புகழும் பெறப்போகிறீர்கள். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அதிவேகமாக முன்னேற்றம் காணப் புதுவழிபிறக்கும்.

வெற்றிகள் ஸ்தானம் பலம் பெறுவதால் இந்த நேரத்தில் மனத்தடுமாற்றங்கள் அகலும். மக்கள் செல்வாக்கு [illegible] நம்.

குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ, புண்ணிய ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே உங்களுக்கு பூர்வ புண்ணியத்தின் பயனாக என்னென்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவை அனைத்தும் இப்பொழுது கிடைக்கப் போகின்றது.

குறிப்பாக பிள்ளைப்பேறுக்காகத் தவமிருக்கும் தம்பதிகளுக்கு இப்பொழுது குழந்தை பாக்கியம் கிடைக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் குருப்பெயர்ச்சி இது.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஜீவன ஸ்தானம் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர்.

எனவே கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டு வீர்கள். பொருளாதாரப் பற்றாக்குறை இருந்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. வெளிநாடு செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் வரப்போகின்றது.

**இராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் இராகு பகவான் சஞ்சரிக்கின்றார். சுய பலமற்ற கிரகம் இராகு என்பதால் அது இருக்கும் இடத்தின் அதிபதியைப் பொறுத்தே பலன்களைக் கொடுக்கும். தொழில் வளம் சீராக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.

எதிர்காலம் பற்றிய பயம் அகலும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினை தீரும். அவர்கள் எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்களும் வெற்றிபெறும்.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**




உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குவதால் இக்காலம் ஒரு பொற்காலமாகவே அமையும்.

கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழில் சூடுபிடிக்கும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும்.

**இராகு-கேது பெயர்ச்சி காலம்**

குருப்பெயர்ச்சிக் காலத்தில் 21.3.2022 இல் இராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் ராசிக்கு விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான் இப்பொழுது இலாப ஸ்தானத்திற்கு வருகின்றார். அதே நேரத்தில் 6 இல் உள்ள கேது பஞ்சம ஸ்தானத்திற்கு வருகின்றார். எனவே இலாப ஸ்தானம் வலுவடைகின்றது. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பிள்ளைகளின் வழியில் சுபச்செய்திகள் வந்து சேரும். இதுவரை படித்து முடித்தும் வேலையில்லாமல் இருந்த பிள்ளைகளுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். பூர்வீக இடத்தைக் கொடுத்துவிட்டு புதிய இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்துப் பூஜை அறையில் விஷ்ணு-இலட்சுமி படம் வைத்து திருமால் கவசமும், திருமகள் கவசமும் பாடி வழிபடுவது நல்லது. யோக பலம் பெற்றநாளில் யோகம் தரும் குருதட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவதன் மூலம் வளர்ச்சி அதிகரிக்கும்.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.12.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம்.

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம்.

இக்காலத்தில் மிகமிக கவனத்தோடு செயற்படுவது நல்லது. இருப்பினும் உங்கள் இராசியைப் பொறுத்த வரை 6 இற்கு அதிபதி செவ்வாய் அஷ்டமாதிபதி சனியைப் பார்ப்பதால் எதிர்பாராத நல்ல திருப்பங்களும் ஏற்படும். ஒரு பெருந்தொகை இடவிற்பனையால் கிடைக்கும்.

கட்டடம் கட்டியும், வாடகைக்கு விட முடியவில் லையே' என்று கவலை பட்டவர்க ளுக்கு நல்ல யோகம் இப்பொழுது அமையும். இடமாற்றங்கள் இனிமை தரும். உத்தியோக மாற்றங்கள் உயர்விற்கு வழிகாட்டும்.

**பெண்களுக்கான பலன்கள்**

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி சாதகமான பலன்களை அள்ளி வழங்கப்போகின்றது. குருவின் நேரடிப் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தொட்டது துலங்கும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும்.

பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை சிறப்பாக நடத்துவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். ஒரு சிலருக்கு உத்தியோகத்தோடு சுய தொழில் செய்யும் முயற்சி கைகூடும். ஆதியந்தப்பிரபு வழிபாடு வளர்ச்சி தரும்

(தொடரும்)

# எதிர்க்கட்சியுடன் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்ட லொஹான்

(கொழும்பு)

எதிரணியினருடன் ஏற்பட்ட காரசாரமான விவாதத்தில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த எதிரணியினரை நோக்கி கூச்சலிட்டதுடன் கடும் சொற்பிரயோகங்களையும் மேற்கொண்டார்.

உர விவகாரம் தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் எதிர்கட்சியினருடன் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

அதன் போதே லொஹான் ரத்வத்த இவ்வாறு செயற்பட்டார்.

அருகில் இருந்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, ரத்வத்தவின் தலையில் கைகளை வைத்து அவரை அமைதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

அண்மையில் லொஹான் ரத்வத்த சிறைச்சாலையில் கைதிகளை மண்டியிட வைத்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பலாலி உட்பட அனைத்து விமான நிலையங்களிலும் விமானப்படை தயார் நிலையில்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையை அடுத்து ஏதாவது அவசரநிலை ஏற்பட்டால் உதவிகள் வழங்குவதற்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் உட்பட சுமார் 10 விமானங்கள் தயார் நிலையில் உள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்தார்.

இரத்மலானை, அனுராதபுரம், பலாலி, வீரவில, அம்பாறை, கட்டுகுருந்த, கொக்கல, தியத்தலாவை, வவுனியா, மட்டக்களப்பு, புத்தளம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து விமானப்படைத் தளங்களிலும் அனர்த்தங்களைச் சமாளிப்பதற்கு விசேட பயிற்சி பெற்ற விசேட அதிரடிப்படையினரின் சிறப்பு குழுக்கள் பணியில் ஈடுபடுத்த தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-5)

# வாகன உதிரிப்பாக இறக்குமதிக்கு இதுவரை தடையில்லை

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)

வாகன உதிரி பாகங்களை இறக்குமதி செய்வதற்கு இதுவரை தடை விதிக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் நேற்றுப் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியினார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அத்தோடு வாகன உதிரிபாகங்களின் விலையில் வரம்பற்ற அதிகரிப்பு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார். (நி-5)

## புத்தளத்தில் வீதிகள் நீரில் மூழ்கின



(கொழும்பு)

கடும் மழையுடனான காலநிலை காரணமாக புத்தளம் பகுதியில் உள்ள சில வீதிகள் சுமார் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு நீரில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5)

## மகா ஓயாவை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம்

(கொழும்பு)

கடுமையான மழை காரணமாக மகா ஓயா நீர் மட்டம் உயர்வடைந்துள்ளமையினால், அதனை அண்டிய பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடும் என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கிரி உல்ல, வரதகொல்ல, நால்ல, திவுல்தெனிய, வெலிஹிந்த, அலவ்வ, மீரிகம, பன்னல,



வென்னப்புவ, நீர்கொழும்பு மற்றும் கட்டான ஆகிய பிரதேசங்களில் சிறு வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பொலித்தீன் விலையும் அதிகரிப்பு

(கொழும்பு)

உற்பத்திச் செலவு அதிகரிப்பு காரணமாகவே பொலித்தீன் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீள் சுழற்சியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

சர்வதேச சந்தையில் மூலப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையே இதற்கு முக்கிய காரணம் என அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் மக்கள் குறித்த பொருட்களைப் பெற்றுக்கொள்ள பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில், பொலித்தீன் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## நஷ்டத்தில் இலாபம்

உயிரிழப்பைத் தவிர நமக்கு ஏற்படும் எல்லா நஷ்டங்களிலும் ஏதேனும் ஒரு வகையில் இலாபம் இருக்கும்.

ஒவ்வொரு விடயத்திலும் உள்ள நஷ்டத்தையும் கஷ்டத்தையும் ஆராய்ந்து அதில் உள்ள இலாபங்களை எண்ணிப் பார்க்க ஆரம்பித்து விடுவோமானால் நிம்மதியாகக் காலம் தள்ளுவது மிகச் சாதாரணமான காரியமாகிவிடும்.

எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வராமல் போய் விட்டதா? பல்லைக் கடித்துக் கொண்டு சும்மா இருக்கப் போகிறோம்.செலவு மிச்சம். எனவே பணம் வராமல் போனது இலாபமே தவிர நஷ்டமல்ல.


தேர்வில் தோற்றுவிட்டால் ஓர் ஆண்டு நட்டம் தான். ஆனால் ஆழமான கல்வியும் தோல்வியைச் சந்திக்கக்கூடிய மனத்திடமும் வந்து விட்டது. இவை இரண்டும் இலாபங்கள். வெளிநாட்டுக்குச் செல்வதாக இருந்த பயண வாய்ப்பு ஒன்று நழுவிப்போய் விட்டதா? பணம் மிச்சம். நாளும் நேரமும் மிச்சம். உடல் நலம் மிச்சம்.

சுற்றிப்பார்க்கச் செல்லும் நாள்களில் இருந்து சம்பாதித்துக் கொண்டிருந்தால் அந்த வரவு மிச்சம். இப்படி எத்தனையோ இலாபங்கள்.

காதல் தோல்வியா? பெற்றோர், உற்றார், உறவினரிடையே நற்பெயர் மிச்சம். முறைப்படி திருமணம் செய்து கொள்வதால் அதன் மூலம் கிடைக்கும் சில பல வருமானங்கள் மிச்சம். சில விடயங்களில் எந்த விதத்திலும் அது இலாபமில்லாத செயலாகத் தோன்றினால் இயற்கை விட்ட வழி என்று அதை ஏற்கத் தயாராகி விட வேண்டும்.

நமக்குஏற்படும்கஷ்டங்களைத்தோல்விகளை நாம் நியாயப்படுத்திக் கொண்டு விடவேண்டும்.இந்த மனப்பான்மையை நாம் கைக்கொள்வோமானால் துன்பங்களெல்லாம் நம் முன் தூள் தூள்!

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

## நவரத்தின மாலை

இவனைச்சும்மாவிட்டு விட்டால் தங்கக் கோடரியை இரும்புக் கோடரியாக மாற்றியது போல நம் பொக்கிஷத்திலுள்ள தங்கத்தை எல்லாம் இரும்பாக்கி விடுவான்" என்றான்.

பண்டிதர்களும் கூடிப் பேசி இரண்டு நாட்களானதும் மன்னனைக்கண்டு, "அரசே! அந்தக் கரிய உருவம் குண்டாசுரன். அவன் திரேதாயுகத்திலிருந்து வாழ்ந்து வருபவன். அவன் மாய மந்திரங்கள் கற்றவன் என்று புராணங்கள்கூறு கின்றன. மிகவும் பயங்கரச் செயல்களைக் கூசாமல் செய்பவன்" என்றனர்.

"அப்படியா! அந்த குண்டாசுரனை கொன்று, அவனது உடலை கொண்டு வருபவனுக்கு என் நாட்டில் பாதியைக் கொடுக்கிறேன்" என்றான்.

மன்னன் இவ்வாறு கூறிய மறுநாள் அரண்மனைத் தலைமைச் சமையற்காரன் அனந்தராமன், மன்னன் உணவு உண்டு விட்டு இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது அவன் முன் போய் நின்று, "அரசே! நீங்கள் மன்னிப்பதாக இருந்தால் நான் ஒரு விடயத்தைக் கூறுகிறேன்" என்றான். மன்னனும், "சரி... விடயத்தைச் சொல்" என்றார்.

"நீங்கள் ஏரியில் பார்த்த கரிய உருவம் பண்டிதர்கள் கூறியது போல குண்டாசுரனும் இல்லை அண்டாசுரனும் இல்லை.

அவன் நம் சமையலறையில் வேலை செய்யும் குண்டப்பன். நான்தான் அவனை வெள்ளிக்கிழமையன்று மரங்களிலுள்ள உலர்ந்த மரக்கிளைகளை வெட்டி விறகு கொண்டு வரும்படி ஏரிக் கரைக்கு அனுப்பினேன்.

அவன் எப்போதும் கறுப்பு வேட்டி, கறுப்புச் சட்டை, கறுப்பு முண்டாசு கட்டிக்கொண்டிருப்பவன். அவன் மரக் கிளைகளை வெட்டப் போன போது, நீங்கள்



மேளதாளத்துடன் கோடரியோடு வருவதைக் கண்டு பயந்து ஏரிக்குள் குதித்து மறைந்து கொண்டான்.

உங்கள் கோடரி தவறிப் போய் ஏரிக்குள் விழவே, வீரர்கள் தன்னைத் தான் தாக்குகிறார்களோ என நினைத்துத் தன் முண்டாசுத் துணியால் முகத்தையும் மூடிக் கொண்டு நீர் மட்டத்திற்கு மேல் வந்து தன் இரும்புக் கோடரியை விட்டெறிந்தான்.

அதற்குப்பின் அவனுக்குத் தங்களது கோடரி விழுந்தது தெரிந்தது. அவன் ஏரிக்குள் மூழ்கித் தேடி அதை எடுத்து வந்து விட்டான்" என்று கூறி குண்டப்பனைக் கூப்பிட்டான்.

குண்டப்பனும் தங்கக் கோடரியுடன் வந்து மன்னன் முன்நின்று, "அரசே! நான் தான் அந்தக் கரிய உருவம். பயத்தில் சரியாகப் பேசமுடியாமல் என் பெயரைக் கூட குண்டே என்று பாதியோடு நிறுத்தினேன்" என்று கூறித் தங்கக் கோடரியை அவனிடம் கொடுத்தான்.

சமையற்கார அனந்தராமனும், "நம் சமஸ்தானப் பண்டிதர்கள் எப்படியாவது இந்தத் தங்கக் கோடரியைப் பெறத்திட்டம் போட்டனர். அது பலிக்கவில்லை.

கரிய உருவம் பற்றிக் கேட்டால் ஏதோ புராணங்களையே அலசிப் பார்த்ததாகக் கூறி குண்டாசுரன் என்ற பெயரைச் சொல்லி உங்களை ஏமாற்றப் பார்த்தனர்" என்றான்.

மன்னனுக்கும் அந்த நான்கு பண்டிதர்களும் ஏதோ சாஸ்திரம் பரிகாரம் என்றெல்லாம் சொல்லிப் பணம் பறிக்கின்றனர் என்பது தெரிந்து விட்டது. உடனே, நான்கு பண்டிதர்களையும் வரவழைத்து, "இவன்தான் நீங்கள் சொன்ன குண்டாசுரன். நீங்கள் ஆசைப்பட்ட தங்கக்கோடரிஇதோ! என்னை ஏமாற்றிய உங்களுக்கு பத்து வருடம் சிறைவாசம்"" எனக் கூறி அவர்களை சிறையில் அடைத்தான்.

குண்டப்பனை மன்னன் பாராட்டி தன் கழுத்தில் அணிந்திருந்த நவரத்தின மாலையை எடுத்துப் பரிசாக அளித்தான். அவனும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான்.

(முற்றும்)

# மகாபாரதம்




உடன் மன்னன்.."நீர் துயரமின்றி இருக்கக் காரணம் என்ன? சாத்திர ஞானமா?தவமா?" என்று வினவினான்.

அந்தணன், "மன்னனே... இந்த உலகத்தில் ஒழுக்கத்தில் உயர்ந்தவரோ, குறைந்தவரோ, மிகவும் தாழ்ந்தவரோ எந்த நிலையினராயினும் அவரவர் கர்மத்திற்கு ஏற்ப இன்ப துன்பங்களை அனுபவிப்பர்.

இந்த உலகத்துப் பொருட்களில் எதுவும் என்னுடையதன்று. அப்படியே பிறருக்கும் உரியவை அல்ல. இந்தத் தெளிந்த ஞானம் ஏற்பட்டதால், எனக்குத் துன்பமும் இல்லை..

இன்பமும் இல்லை. கடலில் எங்கெங்கோ இருக்கும் கட்டைகள் ஒன்றுகூடிப் பிரிவதுபோன்றது பிறப்பும், இறப்பும் தாய், தந்தை, மனைவி, மக்கள் எல்லோரும் இப்படித்தான் ஒன்று கூடுகின்றனர். பிரிகின்றனர்.

எப்படி உன்மகன்பிரிந்தானோ அப்படியே அறிய முடியாமல் இறந்து விட்டான். துன்பத்தின் இறுதியில் இன்பமும், இன்பம் மாறித் துன்பமும் இயற்கையாக ஒவ்வொருவர் வாழ்விலும் உண்டு.

தற்போது துன்பத்தில் இருக்கும் நீ பிறகு இன்பத்தை அடைவாய். பின் துன்பம்.பின்னர் இன்பம் இப்படி வண்டிச்சக்கரம்போல இன்ப துன்பங்கள் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும்.

இன்ப, துன்பங்களுக்கு உடம்பே காரணமாகும். ஓர் உயிர் எந்த உடலைச் சார்ந்து வினையைச் செய்ததோ அந்த வினையை அடுத்த பிறப்பில் அனுபவித்தே ஆக வேண்டும். இந்த உயிர் ஓர் உடலைச் சார்ந்து பிறக்கிறது.

சுற்றம் என்றும், நட்பு என்றும் சில காலம் சிலரோடு உறவு கொள்கிறது. பொருளாசையில் சிக்கி அந்த ஆசை நிறைவேறாமல் துன்பப்படுகிறது.

உயிர் பல விதமான உறவு முறைகளில் சிக்கித் தவிக்கிறது. செக்கில் இடப்பட்ட பொருள் பிழியப்படுவது போலப் பிறவிச் சுழியில் அகப்பட்டுத் துன்புறுகிறது உயிர்.

மனிதன் தன் உற்றார், உறவினரைக் காப்பாற்றத் தகாத காரியங்களிலும் எடுபட்டுக் கர்மத்தைப் பெருக்கிக் கொள்கிறான். அதற்குரிய பயனை அவன் மட்டுமே அனுபவிக்கிறான்.

அவனது துன்பத்தை எப்படிப் பிறர் ஏற்க முடியவில்லையோ அப்படியே அவன் கர்மத்தையும் பிறரால் ஏற்க முடியாது. அதை அவன் மட்டுமே அனுபவிக்க வேண்டும்.

ஞானிகள் இதைத் தெளிவாக உணர்ந்து உணர்த்தியிருக்கிறார்கள்.

(தொடரும்)

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.

– அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கொட்டித் தீர்க்கும் மழை வெள்ளம்தான் ஓடாதோ!

நாடு முழுமையிலும் கனத்த மழை காரணமாக எங்கும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இடைவிடாது பெய்து வருகின்ற கனத்த மழை காரணமாக தத்தம் வீடுகளில் இருக்க முடியாத நிலையில் மக்கள் இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இயற்கையின் அனர்த்தங்களில் கடும் மழையும் அதனால் ஏற்படும் வெள்ளப் பெருக்கும் சூறாவளியும் மக்கள் சமூகத்துக்கு மிகப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வருவது தெரிந்ததே.

அதிலும் கடும் மழை காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்படுவது கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின் றது.

இவை ஒருபுறமிருக்க, கொட்டித்தீர்க்கும் கன மழையால் வடபகுதி எங்கும் வெள்ளக் காடாய்க் காட்சியளிக்கிறது.

அதிலும் கடந்த காலங்களில் குறிப்பாக நிசா புயலின்போது கூட, மழை வெள்ளம் இருக்கவில்லை என்று கூறக்கூடிய இடங்களில் நேற்றைய தினம் கொட்டித்தீர்த்த கனத்த மழையால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமை சம்பந்தப்பட்ட பகுதி மக்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எவ்வளவுதான் மழை கொட்டித் தீர்த்தாலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதில்லை என்ற இடங்களில் நேற்றைய தினம் பெய்த மழையால் பெருவெள்ளம் தேங்குவதற்குக் காரணம் என்ன என்று ஆராயும் போது, வீதிப் புனரமைப்பே அதற்குக் காரணம் என்பதைக் கண்டறிய முடியும்.

ஆம், எந்தவிதமான ஆய்வு நடவடிக்கைகளும் இல்லாமல் கண்டபாட்டில் வீதிகளை உயர்த்திவிட, வீடுகளில் தேங்குகின்ற வெள்ளம் ஓடும் வழியின்றி வீடுகள் மற்றும் நிறுவனங்களுக்குள் புகுந்து பெறுமதி வாய்ந்த சொத்துக்களைச் சேதப்படுத்திவிட்டது.

இதுவிடயத்தில் புனரமைப்பில் ஈடுபடும் ஒப்பந்த நிறுவனங்களின் பொறுப்பற்ற செயல்களும் நிறையவே உண்டு.

என்ன செய்வது பொறுப்புவாய்ந்த பொறியியலாளர்கள் தாம் நினைத்ததே சரி என்கின்றனர்.

வீதியோர மண்ணை வெட்டி எடுத்து அவற்றை விற்கும் ஒப்பந்த நிறுவனங்கள் எப்படி வீதியமைத்தால் தமக்கு கொள்ளை இலாபம் கிடைக்கும் என்ற நினைப்போடு ெசப்படி வித்தையில் வீதியைப் புனரமைக்க,

அந்தோ! அப்பாவிப் பொதுமக்கள் இலட்சக் கணக்குப் பெறுமதி கொண்ட பொருட்களை வெள்ளத்துக்குத் தாரைவார்த்துவிட்டு நாடியில் கைவைத்து கவலை வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

வடபகுதியில் நடக்கும் இந்தக் கொடுமையைக் கண்டுகொள்ளாதவரை வடபகுதித் தமிழ் மக்களுக்கு உய்வே இல்லை என்பது தான் உண்மை.

# மழைத் தாக்கம் குறைவடைந்த பின்னர் யாழ்.போதனாவுக்கு வருகை தரவும்

## பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கனமழையின் தாக்கத்தினால்யாழ். போதனா வைத்தியசாலைக்கு சாதாரண சிகிச்சை பெற வருவோர் மழைத் தாக்கம் குறைவடைந்த பின்னர் சற்று தாமதமாக வருமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் பெய்துவரும் கனமழை மற்றும் தாதியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தின் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கிளினிக் பிரிவு மற்றும் சாதாரண பிரிவுகளின் செயற்பாடுகள் மந்த கதியில் இடம் பெற்று வருகின்றன.

எனவே பொது மக்கள் தற்போதுள்ள மழை குறைவடைந்த பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார். அத்தோடு சாதாரண சிகிச்சை பெறுவோர் தற்போதைய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்காது, கிளினிக் பகுதி மற்றும் இருதய சிகிச்சை கிளினிக் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரணமாக தற்போது சிகிச்சைகள் இடம் பெறாத நிலை காணப்படுகின்றது. எனவே பொதுமக்கள், சாதாரண சிகிச்சை பெற வருவோர் மழை முடிந்த பின்னர் வருகை தந்து சிகிச்சையினை பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எனினும் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஏனைய விசேட வைத்திய சேவைகள் அனைத்தும் இடம்பெறுவதாகவும் எனினும் சாதாரண சிகிச்சைகள் மாத்திரம் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,33)

# யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்தில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழில்இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட புகையிரதம் வவுனியாவை அண்மித்தபோது திடீரென தீஏற்பட்ட நிலையில் புகையிரத ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று பிற்பகல் கொழும்பு நோக்கி சென்ற கடுகதி புகையிரதம் வவுனியா, தாண்டிக் குளத்தை அண்மித்த போது புகையிரதத்தின் கொட்பொக்ஸ் பகுதியில் திடீரென தீ பிடித்துள்ளது.

இதனை அவதானித்த புகையிரத ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு தீயணைக்கும் பம்பியை செயற்படுத்தி தீயினைக் கட்டுக்குள்கொண்டு வந்து அதனை அணைத்தனர். இதனையடுத்து புகையிரதத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சுமார் ஒரு மணித்தியால தாமதத்தின் பின் குறித்த புகையிரதம் கொழும்பு நோக்கி தனது பயணத்தை தொடர்ந்தது. (ம-3,250)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கல்லூரி வீதி தம்பசிட்டி, கிராமக்கோடு, பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை சந்தை, சாளம்பை, சாரையடி, சிவன், தம்பசிட்டி சந்தி, வி.எம்.வீதி, விஸ்வகுல வீதி, எஸ். எஸ். கட்டடம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், மருதோடை, ஓமந்தை, நம்பங்குளம், நாவற்குளம், குழுமாட்டுச் சந்தி, மறக்காறம்பளை- கணேசபுரம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# கதிர்காமம் ஆலயத்திலிருந்து ரூ.5 கோடி பெறுமதியான மாணிக்கக்கல் மாயம்

(கொழும்பு)

இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரால் கதிர்காமம் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 5 கோடி ரூபாயிற்கும் அதிக பெறுமதியான மாணிக்கக்கல் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை, கதிர்காமம் ஆலயத்திற்கு காணிக்கையாகச் செலுத்தப்பட்ட 38 பவுண் தங்கத் தட்டு காணாமல் போனமை தொடர்பில் அங்கொட லொக்காவின் மனைவியிடம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் வாக்கு மூலம் பெற்றுக் கொண்டுள்ளனர்.(ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."**

**-மூப்பர் அம்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)**

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

'தீயவர்களிடம் சீற வேண்டும். அவர்கள் நமக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதற்காக அவர்களைப் பயமுறுத்த வேண்டும். ஆனால் அவர்கள்மீது ஒருநாளும் விஷத்தைச் செலுத்திவிடக் கூடாது, தீமை செய்யக் கூடாது.

'இறைவனது படைப்பில் மனிதர்கள், மிருகங்கள், செடி, கொடிகள் என்று பல்வேறு உயிரினங்கள் உள்ளன. மிருகங்களில் அமைதியானவை உள்ளன, பயங்கரமானவை உள்ளன, புலியைப் போன்ற கொடிய மிருகங்களும் உள்ளன.

மரங்களில் அமுதம் போன்ற பழங்களைத் தருகின்ற மரங்கள் உள்ளன, நச்சுப்பழத்தைத் தருகின்ற மரங்களும் உள்ளன. இப்படியே மனிதர்களிலும் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள் அமைதியானவர்கள் இருக்கிறார்கள், பயங்கரமானவர்களும் இருக்கிறார்கள் உலகியல் மனிதர்களும் இருக்கிறார்கள், பக்தர்களும் இருக்கிறார்கள்.


(தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

13

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்








படம்-Dஇல் உள்ள அந்த குறியீடுகளை மிக கவனமாக பார்வையிட்டால் அங்கு உண்மையில் இரு குறியீடுகள் தக்கையும் ("U" வடிவமும்), வட்டமும் ("O" வடிவமும்) மட்டுமே இருப்பதை அறியலாம். அதாவது அந்த இரு குறியீடுகளும் ஒன்று சேர்க்கப்பட்டும் அதன் அளவை மாற்றியும் மற்ற குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளது தெரியவரும்.

**எண்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இலக்கங்களை அல்லது குறியீடுகளை முதல் பாவித்தவர்களில் சுமேரியர் சமூகமும் ஒன்றாகும். சுமேரியர்கள் ஆரம்பத்தில் ஆறு குறியீடுகளை உருவாக்கினார்கள். இந்த சுமேரியன் எண் முறை பத்தை அடியாக கொண்டதாகவும், அறுபதை அடியாக (base 60) கொண்டதாகவும் உள்ளது.**

இந்த சுமேரியன் எண் முறை பத்தை அடியாக கொண்டதாகவும், அறுபதை அடியாக (base 60) கொண்டதாகவும் உள்ளது. உதாரணமாக, 73 எண்ணை சுமேரியன் குறியீட்டில் உருவாக்க, ஒரு பெரிய தக்கையும் ஒரு சிறிய வட்டமும் மூன்று சிறிய தக்கைகளையும் பாவிக்கலாம் (படம்: E). பெரிய அலகு எப்பவும் இடது பக்கம் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த சுமேரியன் எண் முறை முதன்மையாக அறுபதை அடியாகவும் துணையாகப் பத்தை அடியாகவும் கொண்டு உள்ளது என்று மேலே கூறப்பட்டுள்ளது. ஆனால் சுமேரியரின் 60 ஐ அடியாகக் கொண்ட எண் முறையை புரிந்து கொள்வதற்கு கொஞ்சம் நாம் சிந்திக்க வேண்டி உள்ளது. எம் சிந்தனையில் பார்க்கும் போது ஒவ்வொரு கையிலும் 5 விரல்கள் உள்ளன. நம் கட்டை விரலில் 2 மூட்டுகளும், மற்ற நான்கு விரல்களிலும் தலா 3 மூட்டுக்களும் உள்ளன. எனவே கட்டை விரலை (thumb) சுட்டிக்காட்டியாக பாவித்து மற்ற நாலு விரலிலும் உள்ள ஒவ்வொரு விரல் எலும்புகளையும் ( finger bone/மூட்டுகளையும்) அடை[illegible]த்துவதில மூலம் நாம் 12 வரை ஒரு கையில் எண்ண முடியும். இதனைப் படம்- F இல் பார்த்தால் புரியும்.




படம்- F

**கட்டை விரலை சுட்டியாக பாவித்து மற்ற நாலு விரலிலும் உள்ள விரல் மூட்டுகளையும் அடையாளப்படுத்தி நாம் 12 வரை என்ன முடியும்**


இப்படி ஒருவரது வலது கையில் ஒரு முறை எண்ணியதும் அல்லது அடையாளப்படுத்தியதும் அவரது இடது கை விரலில் ஒன்றின் மடிப்பை அவிழ்க்கவும். இப்படி இடது கையில் உள்ள 5 விரல்களையும் மடிப்பை அவிழ்த்து நீட்டும்போது அவர் 12 X 5=60 ஐ அடைந்தது இருப்பார். இது படம்: G யில் காட்டப்பட்டுள்ளது. இது தான் இந்த எண் முறைவரக் காரணமாக இருந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

**நீங்களும் முயற்சிக்கலாம் 4**




**பெறுமானம் என்ன?**
**விடை**
**3600+600+60+10+1 =4271**

**சுமேரியன் எண்கள்**




சுமேரியன் இலக்கங்களை அறிமுகபடுத்தியபோது, அவர்கள் பூச்சியத்திற்கு எந்தவொரு இலக்கத்தையும் வைத்திருக்கவில்லை. ஏனென்றால் அவர்களிடம் சுழியம் (பூச்சியம்/சைபர்) என்பது ஒரு இலக்கம் என்ற எண்ணம் அல்லது கோட்பாடு இருந்திருக்கவில்லை. இதுபற்றி தெரியாமை, "எண்கள் இடம் சார்ந்த முறையில்" (Positional System) ஒரு பொருள் என்ற தெளிவின்மையைத் தோற்றிவித்தது. அதாவது 1 என்பதும் 60 என்பதும் 3600 என்பதும் ...... ஒரே மாதிரியான குறியாலேயே அதாவது "Y" ஆல் அடையாளப்படுத்தப்பட்டன. உண்மையான அதன் பெறுமானம் சந்தர்ப்பத்தை பொறுத்து சுமேரியர்களால்/பபிலோனியர்களால் ஊகிக்கப்பட்டே கண்டுபிடிக்கப்பட்டன. சுமேரியரோ அல்லது அவர்களைத் தொடர்ந்து மொசொப்பொத்தேமியாவில் வாழ்ந்த பபிலோனியரோ இதற்கு தீர்வு காணவில்லை.

**சுமேரியர்கள் தமிழர்களாக?**

**"மாயன்களுக்குக் கிழக்கிலிருந்து வந்தவர்களிதான் சகல அறிவையும் கற்றுத் தந்தார்கள்' என்று மாயன்களின் சரித்திரத்திலேயே உண்டு . அப்படிக் கிழக்கில் இருந்து வந்தவர்கள் ஒன்றில் சுமேரியராக இருந்திருக்க வேண்டும். இல்லை தமிழர்களாக இருந்திக்க வேண்டும். அதுவும் இல்லை என்றால் சுமேரியர்கள் கூடத் தமிழர்களின் தொடர்புள்ளவர்களாக இருக்க சாத்தியம் உண்டு." இல்வாறு ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.**

இந்த "எண்கள் இடம் சார்ந்த முறைப்" பிரச்சினை கி.பி 500 வரை தீர்க்கப்படவில்லை. சுழியம் என்பதை வெறும் குறியீடாகக் கருதாமல், எண்ணாக முதலில் பாவித்தவர்கள் இந்தியர்கள் ஆகும். கணித அடிப்படையில் பூச்சியத்திற்கு இரண்டு பயன்கள் உண்டு. ஒன்று எதுவும் இல்லாத வெற்றிடம் அல்லது சூனியத்தைக் குறிப்பது(0), இன்னொன்று இட அளவைக் குறிப்பது (100, 1000 என்பது போல). சூனியம் என்கிற நோக்கில், பூச்சியம் பற்றிய குறிப்பு ரிக் வேதத்திலேயே முதலில் குறிக்கப்பட்டுள்ளது. இட அளவில் பூச்சியத்தின் பயன், இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டிலேயே பாரதத்தில் மிகத் தெளிவாக அறியப்பட்டு இருந்தது என்று கூறப்படுகிறது.

**கணித அடிப்படையில் பூச்சியத்திற்கு இரண்டு பயன்கள் உண்டு. ஒன்று எதுவும் இல்லாத வெற்றிடம் அல்லது சூனியத்தைக் குறிப்பது(0), இன்னொன்று இட அளவைக் குறிப்பது (100, 1000 என்பது போல).**

அராபிய எண்கள் என்று அழைக்கப்படும் 1,2,3,4.. எண்முறையை உருவாக்கியதும் பாரதமே. இந்த முறையை பாரதத்தில் கற்றுக் கொண்ட அராபியர், அதை ஐரோப்பாவில் பரப்பியதால், இவை அராபிய எண்கள் என வழங்கலாயின. இவற்றை 'இந்திய எண்கள்' என்றே குறிப்பிட வேண்டும் என்று கணித அறிஞர் Laplace கூறியுள்ளார்.

### சுமேரியர்- பபிலோனியர்எண்கள்

**(கி.மு சுமார் 2000 ஆண்டுகள்)**

சுமேரியன் எண் முறை பண்டைய பபிலோனியருக்கு கொடுக்கப்பட்டு பின் சிறிது மாற்றி அமைக்கப்பட்டு இன்றும் பாவிக்கப்படுகிறது. பபிலோனியரின் கணிதம் மற்றும் அறிவியல் அறுபதினை அடிப்படையாக (60 மடங்கால் அதிகரித்தல்) கொண்ட எண் முறையைக் கொண்டது. இதன் அடிப்படையில் அவர்கள் 60 நிமிடம் ஒரு மணி நேரமாகவும், 24 மணி நேரம் ஒரு நாளாகவும் மற்றும் வட்டத்தின் கோணத்தை 360 பாகைகளாகவும் கணக்கிட்டனர். உண்மையில் சுமேரியர்களின் எண் முறை இன்னும் எமது நாளாந்த வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

**சுமேரியன் எண் முறை பண்டைய பபிலோனியருக்கு கொடுக்கப்பட்டு பின் சிறிது மாற்றி அமைக்கப்பட்டு இன்றும் பாவிக்கப்படுகிறது. பபிலோனியரின் கணிதம் மற்றும் அறிவியல் அறுபதினை அடிப்படையாகக் கொண்ட எண் முறையைக் கொண்டது. இதன் அடிப்படையில் அவர்கள் 60 நிமிடம் ஒரு மணி நேரமாகவும், 24 மணிநேரம் ஒரு நாளாகவும் மற்றும் வட்டத்தின் கோணத்தை 360 பாகைகளாகவும் கணக்கிட்டனர். உண்மையில் சுமேரியர்களின் எண் முறை இன்னும் எமது நாளாந்த வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.**

எமது தசம முறையில் நாம் எண்களை எழுதும் போது, ஒவ்வொரு குறியும் இருக்கும் இடம் முக்கியமானது. உதாரணமாக 278 இல் 2 என்ற குறி 200 ஆகும்.

அது போல 7 என்பது 70 என்ற பெறுமானத்தையும் 8 என் பது, அதையே, அதாவது 8 ஐ குறிக்கிறது இங்கு இருக்கும் நிலையின் பெறுமானம் பத்தை அடியாக கொண்டது. (அதாவது ஒவ்வொரு இடப் பெறுமானமும் பத்து மடங்கால் அதிகரித்தல் 1, 1x10, 10x10)

ஆகவே 278 இல், 2 இன் பெறுமானம் 2X10X10 ஆகும். அப்படியே 7 என்பது 7X10 ஆகவும், 8 என்பது 8 X 1 ஆகவும் உள்ளது. ஆகவே ஒவ்வொரு நிலைக்கும் எண்குறியீடு இடது பக்கம் ஆக அசையும் போது அது பத்தின் மடங்கால் கூடுகிறது.

தொடரும்

## பாடசாலைகளு...

ளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கன மழையினால் மூன்று மாவட்டங்களும் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் முன்வைத்த பரிந்துரைக்கமைய மாகாண ஆளுநரின் அனுமதியுடன் இன்றைய தினம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

(ம-3,18,33)

## 17 பேர்...

தோரின் மொத்த எண்ணிக்கை 13,192 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 10 ஆண்களும் 7 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## பரந்தன் ஏ9...

யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவத்தில் குமரபுரம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய மகேந்திரராசா யூட்கபிசன் மற்றும் பரந்தன் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சவுந்தானந்தன் காந்தீபன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரில் ஒருவர் நேற்றைய தினம் தனது பிறந்தநாளை கொண்டாட விருந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

(ம-3,100)

## அதிகூடியளவான...

08.30 மணி முதல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் திருநெல்வேலியில் அதிகூடியளவு மழைவீழ்ச்சியாக 243.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், இவ்வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் பதிவாகிய அதிகூடியளவு மழைவீழ்ச்சியாக இது அமைந்துள்ளதாகவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

குறித்த காலப் பகுதியில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் 206.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பருத்தித்துறையில் 188.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ்ப்பாணம் கோட்டையில் 172.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் அச்சுவேலியில் 141.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் தெல்லிப்பழையில் 124.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-3,18,33)

## நாடு முழுவதும்...

ஒருவர் காணாமல்போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

மேலும் 17 மாவட்டங்களில் 8,820 குடும்பங்களைச் சேர்ந்த 23,638 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

18 வீடுகள் முழுமையாகவும் 960 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இந்தநிலையில், 385 குடும்பங்களைச் சேர்ந்த 1,671 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது. (ம-3)

## யாழில் தொடர்...

பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 508 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், வேலணை, ஊர்காவற்துறை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சாவகச்சேரி, மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே மேற்படி தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் யாழ்.மாவட்டத்தில் சீரற்ற வானிலை காரணமாக 75 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

139 குடும்பங்களைச் சேர்ந்த 463 பேர் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்து 8 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-3,18,33)

## நாடு முழுவதும்...

யுள்ள ஆழம் மற்றும் ஆழம் குறைந்த கடல் பகுதிகளிலும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியிருப்பதே இதற்கு காரணம் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் பலமாக நகர்ந்து இலங்கையின் வடக்கு கடற்கரைக்கு அருகில் தமிழகத்தின் வடக்கு கடற்கரையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் விளைவு பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீச வாய்ப்புள்ளது.

அப்பகுதியில் உள்ள மீனவ மக்களை உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது. (ம-3)

## 42 பேருக்கு...

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மேலும் 42 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை தனிமைப்படுத்துவதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காண சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250)

## வடக்கு உட்பட...

வடமாகாணத்தின் 5 மாவட்டங்கள் உட்பட 16 மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

அதன்படி மேலும் வட மாகாணம் போன்று காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

யாழின் அசாதாரண நிலைமை தொடர்பில் மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்ததாவது,

மிகக் குறுகிய காலத்திலேயே மழைவீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு இருக்கின்றது. அநேகமான வீதிகள், வீடுகள், பொது இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நீர் நிலைகள் பல நிரம்பியுள்ளதன் காரணமாக சிறுவர்களை மிகப் பாதுகாப்பாக பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் இவ்வாறான நேரங்களில் பல விபத்துக்கள் ஏற்பட்டிருந்தது. அவற்றை அடையாளப்படுத்தி மக்களுக்கு தெரியப்படுத்த பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபையினரை கேட்டிருக்கின்றோம்.

மேலும் இந்த வெள்ள நிலைமை தொடர்ந்து ஏற்படுமிடத்து சுகாதார நிலையை கவனத்தில் எடுத்து அதற்கான முன்னாயத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் பிரதேச செயலாளர்கள் உள்ளூராட்சி சபையுடன் இணைந்து வெள்ள நிலைமையை கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதன் பின்விளைவுகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம். பொதுமக்கள் எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும்.

கடல் நீர்மட்டம் உயருவதன் காரணமாக வெள்ள நீர் வடிந்து செல்வதில் தாமதம் ஏற்படுகிறது. தொண்டைமானாறு, நாவற்குழியில் உள்ள தடுப்பணைகள் திறந்து விடப்பட்டு நீர் வழிந்தோட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. பொதுமக்கள் வடிகால்களை சுத்தப்படுத்தி நீர் வழிந்தோடத்தக்க வகையில் வைத்திருக்க வேண்டும்.

இந்த நிலைமை ஓரிரு நாட்களுக்கு தொடரலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருப்பதால் பொதுமக்கள் இயற்கை அனர்த்தத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அதே வேளை கடல்சீற்றம், கடும் காற்று காரணமாக கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது என்றார்.

(ம-3,18,33,104)


தன நிதானய
திகதி - 2021.11.09
சீட்டிழுப்பு இலக்கம் - 611
M 19 32 50 52

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 09.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2876
L 37 46 63 67

மஹஜன சம்பத
திகதி 2021/11/09
சீட்டிழுப்பு இலக்கம் 4581
U 4 8 3 6 3 4

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/11/09
சீட்டிழுப்பு இலக்கம் 1631
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 12 14 22 23

மெகா பவர்
திகதி 09/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0929
R 13 30 47 49 56

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1384
சீட்டிழுப்பு திகதி: 09.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,501,492
வெற்றி இலக்கங்கள் 20 29 58 70 M

சனிதா
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3719
சீட்டிழுப்பு திகதி: 09.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,640,753.00
வெற்றி இலக்கங்கள் 02203468 O

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1558
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 09.11.2021
தினம் செவ்வாய்
K 17 58 59 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 69,402,813/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,124,821/=
திகதி 09.11.2021
வெற்றி வாரம் 3270
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 27 37 39 53 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,736,580/=

ஜயக
சீட்டிழுப்பு வாரம் 763
09.11 2021 செவ்வாய்க்கிழமை
V 01 15 17 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,037,060
Web: www.dlb.lk

# கொரோனா பரவல் தீவிரமடையுமானால் நாட்டை முடக்குவதற்கான பரிந்துரையை தவிர எம்மிடம் மாற்று வழியேதுமில்லை

## விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)

கோவிட் தொற்று பரவல் தீவிரமடையாமல் தடுப்பதாயின் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றுவதே அத்தியாவசியமானதாகும்.

அவ்வாறில்லை எனில் நாட்டை முடக்குமாறு பரிந்துரைப்பதைத் தவிர சுகாதார தரப்பினருக்கு வேறு மாற்று வழி கிடையாது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தற்போது மீண்டும் நாட்டில் கோவிட் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் தரப்பினரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதுள்ள நிலைமையை மிகவும் அபாயம் மிக்கதாகவே கருத வேண்டும். தற்போதுள்ள நிலைவரத்தின் உண்மை நிலையை அடுத்து வரும் வாரங்களிலேயே தெளிவாகக் காண முடியும்.

இதன்போது ஏற்படும் அபாயத்திலிருந்து மீண்டு மீண்டும் சுமூகமான நிலைமைக்கு செல்ல முடியாத சூழல் ஏற்படக்கூடும். எனவே கோவிட் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு காணப்படும் ஒரேயொரு வழி சுகாதார விதிமுறைகளை முறையாக பேணுவது மாத்திரமேயாகும்.

அவ்வாறில்லை எனில் தொற்றாளர் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்தால் பழைய நிலைமையை அடைவது மிகக் கடினமாகும். அவ்வாறானதொரு அபாய நிலைமை மீண்டும் ஏற்பட்டால் நாட்டை முடக்குமாறு பரிந்துரைப்பதைத் தவிர எமக்கு வேறு மாற்று வழி கிடையாது என்றார். (ம-3)

# அரசுக்கு எதிராக ஒன்றுபடாவிடின் எதிர்காலத்தில் நாட்டில் வாழ முடியாது

## ஐக்கிய இளைஞர் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டின் தற்போதைய நிலைவரங்களை ஒத்த சம்பவங்களே ஹிட்லர் ஆட்சியிலிருந்த போது ஜேர்மனியிலும் நடைபெற்றன. ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாகக்கூறி ஆட்சிபீடமேறிய ஹிட்லர், குறுகிய காலத்திற்குள்ளாகவே மிகமோசமான பாஸிசவாதியாக மாறினார்.

அவருக்கும் எமது நாட்டின் ஆட்சியாளருக்கும் இடையில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆகவே தற்போதைய அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகளுக்கு எதிராக இப்போது அனைவரும் ஒன்றுபடாவிட்டால், எதிர்காலத்தில் வாழ்வதற்கென இந்த தேசம் எஞ்சியிருக்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஓரங்கமான ஐக்கிய இளைஞர் சக்தியின் உப தலைவர் ரெஹான் ஜயவிக்ரம சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

# புலனாய்வு அதிகாரிகளை சஹ்ரான் சந்தித்தார்

## சபையில் ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் புலனாய்வு அதிகாரிகளை தனது கணவர் பல முறை சந்தித்ததாக சஹ்ரானின் மனைவி வாக்குமூலம் அளித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தநிலையில் சஹ்ரானின் மனைவி வழங்கிய சாட்சியத்தின் பிரதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அவர் பொதுப் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். (ம-3)





கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்றையதினம் யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம் மற்றும் அராலி வடக்கு முருகன் ஆலயங்களில் சூரசங்கார உற்சவம் (சூரன் போர்) வெகு சிறப்பாக நடைபெற்றது.

# நாட்டில் மேலும் 717 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 717 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 546,652 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 6,689 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 522,184 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)


3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நவரத்தினம் புண்ணியமூர்த்தி
உதிப்பு - 24.02.1941
உதிர்வு - 15.11.2018

இதயங்களெல்லாம் நொருங்க
இமைகளெல்லாம் நனைய
எங்களை தவிக்கவிட்டு
எங்கே பயணமானீர்...!!

(8550)

வைரவர் கோவில் வீதி,
நெல்லியடி கிழக்கு,
வதிரி, கரவெட்டி.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

(8556)

பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18 - 30 வரை. வேலை நேரம் காலை 7.30 மணி - 5.30 மணி வரை. மாத வேதனமாக 17,000/= - 25,000/= வரை வழங்கப்படும். (8554)

074 049 0003

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2918)
0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.